(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** 23 PTM 101

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**எம்.ஏ.-தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

# இக்கால இலக்கியம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. பாரதியின் முப்பெருங் காவியங்களுள் ஒன்று
   (அ) பாஞ்சாலிசபதம் (ஆ) தேசியகீதங்கள்
   (இ) வண்டிக்காரன் பாட்டு (ஈ) ஞானரதம்
2. 'நவீனத் தமிழ்ச் சிறுகதைகள்' - தொகுப்பு நூலின் ஆசிரியர் __________
   (அ) வண்ணநிலவன் (ஆ) சா.கந்தசாமி
   (இ) நாஞ்சில் நாடன் (ஈ) ஜெயமோகன்
3. கமலாம்பாள் சரித்திரத்தின் கதை நாயகர்
   (அ) இராமசாமி ஐயர் (ஆ) சுவாமிநாத ஐயர்
   (இ) முத்துசாமி ஐயர் (ஈ) சுப்பிரமணிய ஐயர்
4. ஜீவா அவர்கள் பிறந்த தினம்
   (அ) ஆகஸ்ட் 21 (ஆ) ஏப்ரல் 21
   (இ) மே 21 (ஈ) நவம்பர் 21
5. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' - என்று கூறிய நூல் எது?
   (அ) தண்டியலங்காரம் (ஆ) தொல்காப்பியம்
   (இ) பிங்கல நிகண்டு (ஈ) மாறனலங்காரம்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. பாரதிதாசனின் இயற்பெயர் ___________
7. கரிசல் இலக்கியத்தின் தந்தை ___________
8. கா.சு.வேலாயுதனின் முதல் புதினம் __________
9. தி.வெ.ராஜேந்திரன் ஆற்றிய பணியைக் கூறு
10. பத்தாயிரம் மைல் பயணம் எவ்வகை இலக்கிய நூல்?

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. (அ) அப்துல்ரகுமானின் கல்வி குறித்த பார்வையை பித்தன் கவிதை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அன்பு என்பது பரிமாற்றமே – என்பதை அன்றிலன் கவிதை வழி புலப்படுத்துக.

12. (அ) வறுமைச் சூழலை, கிருஷ்ணன் நம்பியின் சட்டை கதை எவ்விதம் உணர்த்துகிறது?

(அல்லது)

(ஆ) கி.ரா.வின் பெண் கதைகளில் காணலாகும் இல்லறத்திற்கான சொல்லாடல்கள் சிலவற்றை எழுதுக.

13. (அ) ராஜம் அய்யரின் பெண்ணுரிமைச் சிந்தனையை, 'ஸ்திரீ புருஷ சம்வாதம்' வழி புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பச்சியம்மாவின் தோற்றத்தினைக் காட்சிப்படுத்துக.

14. (அ) ஜீவாவின் போராட்ட குணத்தை நாடகம் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஜீவாவின் இளமைக்கால சமூகச் சிந்தனை குறித்து எழுதுக.

15. (அ) 'தமிழ்' எனும் சொல்லின் பொருளை தொ.பரமசிவன் எவ்விதம் விளக்குகிறார்?

(அல்லது)

(ஆ) 'அரிசி' குறித்து இறையன்பு கூறும் செய்திகளை எழுதுக.

**பகுதி – இ ( 5 x 8 = 40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5 )**

16. (அ) பாரதிதாசன், எங்கெல்லாம் அழகு விளங்குவதாக எடுத்துரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) விவசாயிகளின் துயரத்தை வைரமுத்துவின் கவிதை வழி விவரி.

17. (அ) 'அப்பாவிடம் என்ன சொல்வது?''சீசர்' கதைகளின் கருப்பொருளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கி.ரா.வின் பெண் கதைகள் காட்டும் பெண்ணுலகை விவரி.

18. (அ) முத்துசாமி ஐயர் தம் பெண்ணிற்கு வரன் அமைத்த நிகழ்வினைக் காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பொறுப்பற்ற பிள்ளைகளால் விளையும் முதியோர் சிக்கலை மாணிக்கம், பச்சியம்மாள் பாத்திரம் வழி நிறுவுக.

19. (அ) தோழர் ஜீவாவின் இளமையும் வாழ்வும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஜீவாவின் போராட்டங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

50 (அ) தமிழரின் தண்ணீர்ச் சிந்தனைகளை தொ.பரமசிவனார் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'பத்தாயிரம் மைல் பயணம்' நூல் வழி நீ அறிந்த சுவையான தகவல்களைப் பட்டியலிடுக.



*****